செய்தி வெளியீடு எண்.114 நாள்.14.09.2021

<u>பத்திரிகை செய்தி</u>

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு புகைப்படம் எடுக்கும் மையம் செயல்படுகிறது. இத்திட்டத்திற்கு புகைப்படம் எடுக்க இம்மையத்திற்கு தினமும் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் வருவதால், மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்படி , கூட்ட நெரிசலைத் தவிர்க்க தடுப்புகள் அமைக்கப்பட்டு, சமூக இடைவெளியை கடைப்பிடிக்கும் வகையில், வட்டங்கள் வரையப்பட்டு, தினமும் பாதுகாப்பு பணிக்காக போலீசாரும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு புகைப்படம் எடுக்க மையத்திற்கு வரும் பொதுமக்களிடம் தினமும் 70 முதல் 90 வரையிலான விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவ்விண்ணப்பங்களை ஆய்வு செய்து, உடனுக்குடன் அன்றைய தினமே பொது மக்களுக்கு மருத்துவக் காப்பீட்டு அடையாள அட்டை வழங்க மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தலின்படி நடைபெற்று வருகிறது. இம்மையத்திற்கு வரும் பொதுமக்கள் இடைத்தரகர்களை அணுக வேண்டாம் என சென்னை மாவட்ட ஆட்சியர் முனைவர் ஜெ.விஜயா ராணி, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை–01